28

தமிழ்க்கடவுளுக்கு ஆரியப்பாடலா?

7 Pol 9—24



முத்தமிழ் நிலையம், சென்னை.

[illegible]

[illegible]

[illegible]

7Pol 9-24 2447
28

தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா?

G. D.
U. M. S., C
7 Pol 9—24

ஆசிரியர் :
ந. சி. கந்தையா பிள்ளை

முத்தமிழ் நிலையம்
75, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை 1.

காபி ரைட்] [விலை 4. அணா

முதற்பதிப்பு 2000
1947 ஆக்ஸ்டு.

"மன்னுந் தமிழிற் றுதிசெய்த
மாணிக்க வாசகரும்
பன்னும் பெருமை யுணர்ந்தேத்துங்
கீர்த்தனைப் பாவலனும்
துன்னுங் கதிமற்றை யோரடைந்தா
ரெனச் சொல்லுங் கொலோ
உன்னுந் திரைக்கடற் பைந்தானை
சூழ்தரு மொண்புவியே"

—தமிழலங்காரம்
(முருக தாசர்)

Published by:
M. CHAKRAVARTI NAINAR,
C. I. P. House, MADRAS.
Q. H. M. S. 459.

Printed at the Free Printers, Mannady Madras.

முன்னுரை

வயிற்றுப் பிழைப்பின்பொருட்டு வடநாட்டினின்றும் தென்னாடுபோந்த பிராமணரால் கொண்டு வரப்பட்டது சமக்கிருதமொழி. வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு வந்த இம்மொழி, நமது ஆலயங்களினின்றும் தமிழை வெளியே துரத்திவிட்டுத் தான் உள்ளே நுழைந்துகொண்டது. இது, வீட்டுக்கு வேலைக்காரியாக வந்த ஒருத்தி, காலத்தில் வீட்டுக்காரியாகி, வீட்டுக்காரியை வெளியே துரத்திவிட்ட கதை போலாகின்றது. இத்தகாத செயலைக் கண்டும் தமிழர் வாளாவிருக்கின்றனர். பத்துப்பாட்டு மகாநாடு, புறநானூற்று மகாநாடுகளால் தமிழ் ஓங்கிவிடாது. மக்களின் உயிர்க்களங்கள் போன்றுள்ள ஆலயங்களிலேயே அது முதற்கண் நிலைபெறவேண்டும்; இதற்காகவே மகாநாடுகள் கூடவேண்டும்; தேவதாசி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள் பிறந்தமைபோல், ஆலயங்களிலும் ஆரிய ஒழிப்புச் சட்டமும், தமிழ் முழங்கும் சட்டமும் தோன்றவேண்டும். நந்தனாரைத் தீயில் முழுக்காட்டி ஆலயத்துள் நுழைத்த காலம் மலையேறிவிட்டது. அரசர் நூற்றுக்கணக்கான தேவதாசிகளை ஆலயங்களில் அமர்த்தி "இந்தத் தருமத்தை அழிக்கிறவன் சந்திரருள்ளளவும் சூரியர் உள்ளளவும் நரகில் கிடந்து அழுந்துவான்" என எழுதிவைத்த காலம் மாறிவிட்டது. "ஆரியம் கடவுள் மொழி; அதன் மூலம்தான் கடவுளரின் தயவைப் பெறுதல் கூடும்" என்னும் பொய்யான கொள்கையும் உடனே மறையவேண்டும். பகுத்தறிவு உதயமாகும் இக்காலத்தில் ஆலயங்களில் ஆரியம் வழங்குவது தமிழரின் மூடத்தனத்தை விளக்கும் சின்னமாகக் கருதப்படும். சமீப காலத்தில் விளங்கியவரும், புலவர் புராணம் பாடியவருமாகிய முருகதாச சுவாமிகள் கூற்றுக்களால், நம்மவர் பலரே வடமொழி வலிதென்று வாதங்கள் புரிந்து வந்தார்கள் எனத் தெரிகின்றது. "இருபுலவர் வேளாளனென்னும் குலத்தார் தேடிவந்து—அவ்வூகத்தால் வடமொழியே வலிதென் றென்பால் வாதித்தார்"

"வேதம் பிறந்த ததிலென்றார்
மேடமருந்தத் தமிழ்வேதத்
தோத விலையென் றுரைத்தேன்
அக் கரலோ பத்த துனதென்று(ர்)

ஆத லெகர வொகரத்தா
லதனிலேயோ வெனக் கேட்டேன்
வாத முடிந்த திலேயிரவு
மாறிப் பகலும் வந்ததுவே ''

என அவர் கூறுமாற்ருன் இதுநன்கு புலனுகின்றது. இவ்வாறு தமிழ் உயர்வு எனக் கூறுவோருக்கு இன்றுபோல் அன்றும் எதிர்ப்பிருந்து வந்தது. இவ்வயிரம் பற்றியே முருகதாச சுவாமிகள் **"தமிழ் மொழிக் குயர்மொழி தரணியினுளதெனில் - வெகுளியற் றிருப்போன் வெறும் புலவோனே"** என வெகுண்டுகூறுவாராயினர். முருகதாசசுவாமிகளோடு வாதம் புரிந்த வேளாண் புலவர்களைப் போலவே, திராவிடப் பயிற்சிக்குச் சமக்கிருதப் பயிற்சி இன்றியமையாதது; சமக்கிருதத்தில் அளவு கடந்த சுவை இருக்கிறது; அம்மொழிச் சொற்களைத் தமிழோடு கலப்பதற்குத் தமிழ்ப் புலவோர் தயங்குதல் கூடாது; சமக்கிருதத்தைத் தமிழர் கைவிட்டு விடுதல்கூடாது என நம்மவரில் ஒருவர் இருவர் மிகவும் கவலை கொண்டுள்ளார்கள். இன்று ஐம்பது ஆண்டுகளின் முன் எழுதப்பட்ட தமிழ் நடைக்கும் இன்றைய தமிழ் நடைக்கும் அதிக வேறுபாடு உண்டு. நாள் வீதம் பல வடசொற்கள் தமிழினின்றும் நீக்கப்பட்டு விட்டன. அதனுல் தமிழ் அழகுறுகின்றது. பல்வேறு மக்கள் கலப்பதால், மொழிகளில் சிற்சில அயல்மொழிச் சொற்கள் கலத்தல் இயல்பேயாகும். இயன்றவரையில் அவைகளை நீக்கி, அவ்வம் மொழியில் புதிய சொற்களை ஆக்கி வழங்குவதே சிறப்புடையதாகும். இன்றேல் அச்சொற்களை மொழிகளின் உச்சரிப்பு முறைக்கேற்பத் திரித்து வழங்குதல் வேண்டும். இம்முறைகளைக் கிரேக்கர் எபிரேயர், எகிப்தியர் முதலியோர் ஆண்டுள்ளார்கள். பிறமொழிச் சொற்கள் சில, தமிழில் ஏறியுள்ளமையால் தமிழர் அம்மொழிகளை எல்லாம் பயின்று அவைகளுக்கு நன்றி பாராட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்னும் வாதம் வெறும் வாதமேயாகும்.

சென்னை,
20-9-47.

ந. சி. க.

G. D. NAIDU,
U. M. S., COIMBATORE.

தமிழ்க் கடவுளுக்கு ஆரியப்பாடலா?

தோற்றுவாய்

தமிழை வளர்க்க வேண்டும். தமிழில் பலவகை நூல்கள் வெளிவர வேண்டும். தமிழ் வளர்ச்சிக்குத் தடையா யிருப்பவைகளைத் தகர்க்க வேண்டும் என்பவை போன்ற உணர்ச்சி தமிழ் நாடு எங்கும் சுடர்விட்டெரி கின்றது. ஒருவனுக்கு நோய் கண்டால் அந்நோயின் காரணத்தை அறிந்து தக்க மருந்து அளித்தாலன்றி நோய் குணமடையாது. அதுபோலவே தமிழ் வளர்ச்சி தடைப் படுவதற்குக் காரணம் எதுவென அறிந்து அக்காரணத் தைக் களைந்தாலன்றி, தமிழ் செவ்வனே வளர்ச்சி உற மாட்டாது. ஒரு வயலுள் கோரை, நாணல் முதலியவை வளருமாயின், அவை நெற்பயிர் செவ்வனே வளர்ந்து நல்ல கதிர்களை ஈனுவதற்குத் தடையாகும். நெற்பயிர் பயன் அளிக்க வேண்டுமாயின், அதனூடே வளரும் களை களைக் களைதல் வேண்டும்; வேறு எவ்வித உபாயங்களைக் கையாளினும் பயனற்றதாகும்.

சமயம் மக்களுக்கு உயிர்நாடி போன்றது. மன்னாதி மன்னரும் வீராதி வீரரும் சமயம் என்னும் பெயரைக் கேட்டவுடன் தலை வணங்குகின்றார்கள். சமயத்துக்கு இருப்பிடம் கோயில். தமிழ்மக்கள் வழிபடும் கடவுளர் தமிழ்க் கடவுளரே. தமிழ்க்கடவுளர் கோயில் கொண்டரு ளியிருக்கும் ஆலயங்களில் ஆரியம், நுண்ழைந்து கொண்டு தமிழை வெளியே துரத்திவிட்டது. ஆலயங்களில் பணி செய்யும் பூசாரி, தான் ஆரியன் என்கின்றான்; ஆரியம்

பாடுகின்றான்; அவன் தமிழ் பாடுவதில்லை. தேசிகர், ஓதுவார், பண்டாரங்கள் முதலிய தமிழ் பாடுவோர் ஆரியம் பாடும் பூசாரியினும் பார்க்கத் தாழ்ந்தவர்கள் என மதிக்கப்படுகிறார்கள். அவர்கள் வெளியே நின்று தமிழ் பாடுகிறார்கள். இதனால் தமிழ் ஆரியத்தினும் பார்க்கத் தாழ்ந்ததென்பதும், ஆரியம் பாடும் பூசாரிகள் தமிழ்பாடும் ஓதுவார் தேசிகர்களினும் உயர்ந்தவரென்பதுமாகிய கருத்துக்கள் ஆலயங்களில் தோன்றி வலி பெற்றுள்ளன. இக் கருத்துக்களை ஆலயங்களில் நடைபெறும் பல செயல்களைக் கொண்டு நாம் நாளும் அறியலாகும். இவைகளைக் காணும் உண்மைத் தமிழனின் இரத்தம் கொதிக்காமல் இருக்கமுடியாது. மக்களிடையே தோன்றி எழும் தமிழ் உணர்ச்சி ஆலயங்களில் நசுக்கப்படுகின்றது. இந்நிலையில் தமிழ் உணர்ச்சி தலை எடுப்பது எவ்வாறு? தமிழ்க் கடவுளருக்கு ஆரியம் பாடுதல் அறிவுடையார் செயலாகத் தோன்றமாட்டாது. ஆலயங்கள் முற்காலத்தில் பல்வகைக் கலைகளுக்கும் இருப்பிடமாயிருந்தன. இவ்வாலயங்களில் ஆரியத்தை ஓட்டித் தமிழ் முழங்கும்படி செய்யின், தமிழ் எளிதில் வளர்ச்சியுறும் என்பதில் சந்தேகம் இல்லை. இக்கருத்துக்கு அடிப்படையாயுள்ள பல காரணங்களை ஆராய்ந்து முறையே கூறுகின்றது இச் சிறிய நூலென்க.

மொழிக்கும் சமயத்துக்கும் உள்ள உறவு.

மொழிக்கும் சமயத்துக்கும் நெருங்கிய உறவு உண்டு. ஒவ்வொரு மதத்தினரும் தமது சமய நூல்கள் எம்மொழியில் உள்ளனவோ, அம்மொழியைக் கடவுள் மொழியாகக் கொண்டு அதனைத் தம் தாய்மொழியினும் மேலாகக் கருதி வருகின்றனர். ஒரு நாட்டில் தோன்றிய மதம், இன்

ஒரு நாட்டில் பரவும்போது, அந்நாட்டினர் அம்மத நூல்கள் எழுதப்பட்டிருக்கும் மொழியைப் பயில்கின்றனர். இதனால் அவர்களது மொழியில் பிறமொழிச் சொற்கள் சிறிது சிறிதாக வந்து நுழைந்து அம்மொழியை மாற்றமடையச் செய்கின்றன.

கிறித்துவ வேதத்தின் பழைய ஏற்பாடு எபிரேய மொழியில் உள்ளது. அதனால் கிறித்தவர் எபிரேய மொழியைத் தெய்வமொழி எனக் கொண்டதோடு அம் மொழியினின்றே உலகிலுள்ள மொழிகள் எல்லாம் தோன்றின என்றும் நம்பி வந்தார்கள். புத்தர் பாலிமொழியில் தனது போதனைகளைச் செய்தார். புத்தரின் போதனைகள் அடங்கிய புத்தவேதம் பாலிமொழியில் எழுதப்பட்டுள்ளது. அதனால் புத்தமதத்தினர் பாலிமொழியைச் சமய மொழியாகவும், கடவுள் தன்மையுடையதாகவும் கொள்கின்றனர். இலங்கைத்தீவில் வழங்கிய எலு என்னும் பழையமொழி, பாலிச் சொற்களையும் அதன் சிதைவுகளையும் ஏற்றுக்கொண்டு சிங்களமாக மாறிற்று. முகமது மதத்தினர் அரபி மொழியைத் தமது சமய மொழியாகக் கொள்கின்றனர். முகமது நபியின் போதனைகள் அடங்கிய முகமதியர் வேதம், அரபி மொழியில் எழுதப்பட்டிருப்பதே இதற்குக்காரணம். கான்பியூசஸ், சீனமக்களுக்குச் சமய போதனை செய்த சீனமொழி, கடவுள் தன்மையுடைய தெனச் சீனர் கூறுவர். பழைய எகிப்தியர், பாபிலோனியர் முதலியோரும் தமது மொழிகள் கடவுள் தொடர்பும் கடவுள் தன்மையும் உடையனவென்று நம்பி வந்தார்கள். கிறித்துவ கத்தோலிக்க மதத்தினர் இலத்தின் மொழியைத் தமது சமயமொழியாகக் கொள்வர். ஆகவே, அவர்கள் அதனைக் கடவுள் தன்மையும் புனிதமுமுடையதாகக் கொள்வர்.

இவ்வாறு பற்பல மொழிகளைச் சமய மொழிகளாகக் கொண்ட மதங்கள் பிறநாடுகளில் பரவும்போது மொழிக் கலப்புச் சமயக்கலப்புக்கள் உண்டாவது இயல்பாகின்றது.

ஆரியம் தென்னாட்டிற் சமயமொழியானது எவ்வாறு?

ஆரியம் பிறநாடுகளினின்றும் வந்து இந்திய நாட்டை அடைந்ததென அறிகின்றோம். வடநாட்டை அடைந்த ஆரிய மக்களின் சமயமொழி ஆரியமாக இருந்தது. அம் மொழியில் அவர்கள் சமய நூல்கள் எழுதப்பட்டுள்ளன. கிறித்துவ, முகமதிய, புத்த, சைவ மதங்களைப் போலவே, ஆரிய மதமும் தென்னாட்டை அடைந்தது. முற்கால அரசர், மந்திர வித்தைகளால் போரில் வெற்றி, செல்வம், அதிகாரம் என்பவைகளைப்பெறலாம் என நம்பினார்கள்.[1] வடக்கினின்றும் வந்த ஆரியப் பிராமணர், யாகங்களினால் போர்களில் வெற்றியையும், பெருஞ்செல்வத்தையும் பெறலாம் எனக் கூறியதைத் தமிழ் அரசர் நம்பினர்; அவர்கள் மூலம் யாகங்கள் பலவற்றைச் செய்தனர். இதனால் பிராமணருக்கு அரச வட்டங்களில் மதிப்பு

1. Early conquerors were believed to owe their success to magical skill, powerful guardians, or charms and talismans which potected and assited them. The Irish Druids are represented as maintaining that it is owing to them the sun rises each morning and sets each night —Footprints of the past—P. 131 - J. M. Wheeler.

U. M. S., COIMBATORE

உண்டாயிற்று.[1] பொதுமக்கள் அவர்களை மதிக்கவில்லை. பிராமணர் மற்றைய மதத்தவர்களைப் போலத் தனித்து நின்று தமது மதத்தைப் பரப்பமுடியவில்லை. அவர்கள் தமிழ்நாட்டுக் கோயிற் பூசகர்களாகிய பார்ப்பனரிடையே திருமணக்கலப்புக் கொண்டனர்; தமிழ்க் கடவுளரையும் வழிபட்டனர்; பார்ப்பனருடைய ஒழுக்கங்கள் சில வற்றையும் பின்பற்றினர்.[2] இதனல் பார்ப்பனர் ஆரியச் சார்பு அடைந்தனர். அவர் தம்மை ஆரியர் எனக் கூறினர்; ஆரியத்தை ஆலயங்களில் நுழைக்க முயன்று வந்தனர். பொதுமக்கள் இதனை எதிர்த்துப் போராடினர்கள்.[3]

---

1. When the Brahmans settled in Southern India and the ancient Tamil Rajahs desiring to secure the benifit of the yagas accorded to the priests, a supreme position to the society, the Brahmanas naturally tried to introduce their socioreligious organization into Tamil society. Pre-Aryan Tamil culture - P. 20 - P. T. S. Aiyangar.

2: Even Brahmans used to eat meat when they took part in vedic sacrifices. Things began to change - gradually, and by the 9th century the cultural gulf between different castes became two wide - The position of women in Hindu civilization P. 91 - Dr. A. S. Altekar M.A. LL.B. D. Litt.

3. It only led to the confusion of caste and the prevalence of social Jealousies that have characterized the life of South India for a thousand five hundred years for, we learn from the Thevaram of Thirunavukkarasu Nayanar that

பிராமணர் அரசருக்கு மந்திரிகளாகவும், ஆசிரியராகவும் இடம் பெற்று அமர்ந்தார்கள். அவர்கள் அரசரைத் தம் வசப்படுத்திக்கொண்டு, பொதுமக்கள் எதிர்த்து நின்ற பல செயல்களில் வெற்றியடைந்தார்கள்.[1] பல்லவ சோழ அரசர்கள் பிராமணரைப் பெரிதும் ஆதரித்தனர். பிற்காலச் சோழ அரசர், தம்மை ஆரியர் எனவும் கூறுவாராயினர். இலங்கையின் வடபகுதியை ஆண்ட சோழ அரசமரபினர், தம்மை ஆரியச் சக்கரவர்த்திகள் எனக் கூறுவாராயினர். பிராமணரால் தம் வயம் ஆக்கப்பட்ட அரசர் காலங்களில் அரச கட்டளையினால் ஆரியம் தென்னாட்டு ஆலயங்களில் இடம் பெறுவதாயிற்று. ஆயினும் தமிழை

---

there was in his day, as there is to-day a consciousness of revalry, if not Jealousy, between the Brahmans and the non-Brahmans or as they were called Aryan and Tamilian.

—Pre-aryan Tamil culture P. 20 - P. T. S. Aiyangar M. A.

1. In all nations the priests placed themselves at the head, and even controlled the King. But in India, the Brahmans went as I remarked still further...the Maharaja was educated in their hands. By then he was moulded to their wishes, they were appointed, by these divine institutes, his guardians, and perpetual, inalienable cousellors. Having thus firmly seized and secured the whole political power had only to rule and enrich themselves out of a nation of slaves at their pleasure ; - Popular History of priest-craft in all ages and nations - P. 85 - William Howitt.

முற்றாக எடுத்துவிட முடியவில்லை. தமிழ்ப் பண்கள் பாடப் படவேண்டும் என்னும் விதியும் கிரியை முறைகளில் இடம்பெறுவதாயிற்று. இன்று ஓதுவார், தேசிகர் என் போர் தூரத்தில் நின்று தமிழ் பாடுகின்றனர். ஆலயங் களில் பூசாரிகளாக அமர்ந்துள்ள பிராமணப் பூசாரிகள், சித்தாந்த சாத்திரங்களிலோ, பண்முறையோடு தேவார திருவாசகங்கள் பாடுவதிலோ, தேர்ந்தவர்களல்லர். அவர் கள், தாம் தமிழர் அல்லர் எனவும், தமிழ் தமது மொழி யன்று எனவும் கருதுபவர்களாவர்; தமிழ்க் கடவுளல்லா தாரும், தமிழர் வழிபாட்டுக் குரியரல்லாதாருமாகிய ஆரி யத் தெய்வங்கள் மீது,துதி கூறும் வடமொழிவேதங்களைத் தமக்குச் சமய நூல்களெனக் கூறுவோராவர்.

மொழி மக்கள் சமூகத்தை ஒன்று சேர்க்கின்றது.

ஐக்கிய அமெரிக்கா முழுமையையும் ஒன்றுபடுத்தி இணைத்து வைப்பது ஆங்கிலமொழி. ஐக்கிய அமெரிக்கா வையும் இங்கிலாந்து கனடா தேசங்களையும் இணைத்து வைப்பதும் ஆங்கில மொழியே யாகும். மொழிப்பற்று எல்லா மக்களிடையும் மிகப் பதிந்துள்ளது. ஒருவன் எம் மொழியைத் தாய்மொழியாகக் கொள்கின்றானோ, அவன் அம்மொழியைத் தனது உயிர்போலக் கருதுகின்றான். இந்தி தமிழ்நாட்டில் கட்டாயக் கல்வியாக வேண்டும் என்னும் சட்டம் உண்டானபோது, அதனால் தமிழருக்குத் தீமை நேருமென உணர்ந்த தமிழ்ப் பற்றுடைய பலர், இந்தி எதிர்ப்புச் செய்து சிறை செல்ல ஆயத்தமானார்கள். நாட் டை மொழிவாரியாகப் பிரிக்கவேண்டும்என்னும் கிளர்ச்சி உண்டாகின்றபோது, தமிழர் எல்லோரும் ஒன்றுசேர் கின்றனர்; தெலுங்கர், மலையாளர் முதலிய மக்களும்

தனித்தனி ஒன்று சேர்ந்து விழிப்படைகின்றனர். மொழிப் பற்று என்பது மனிதனுக்குத் தெரியாமல் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் ஒருவகை உணர்ச்சி. அது, தாய் தாலாட்டிப் பாலூட்டி வளர்க்கும்போதே மனிதனின் இரத்தத்தோடு கலந்து சுவறியுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள பார்ப்பனர் பிறந்த நாள் முதல் தமிழையே வழங்கு கின்றார்கள் ஆயினும், அவர்கள் தாம் தமிழர் அல்லர் என் றும், தமக்குத் தாய்மொழி தமிழன்று என்றும், தாம் ஆரி யர் என்றும், தமது தாய்மொழி ஆரியம் என்றும் உணர் கிறார்கள். ஆகவே அவர்களிடத்தில் தமிழனிடத்தில் எழு வது போன்ற தமிழ்மொழிப் பற்றை நாம் காணுதல் முடி யாது. இவ்வுணர்ச்சி குன்றிய கூட்டத்தினரே இந்திப் பிரசார சபைகளையும், வடமொழியைத் தமிழோடு கலந்து எழுதும்[1] உரை நடைகளையும் தோற்றுவிக்கின்றனர்; இன்றும் புதிதாகச் செய்யப்படும் கலைச்சொற்களில் பல சமக்கிருதச் சொற்களைச் சேர்க்கவேண்டுமென வாதாடு கின்றனர். தமிழ்நாட்டில் பிராமண வகுப்பினருக்கும், அவர் அல்லாதாருக்கு மிடையில் அமைதி நிலவாமைக்குக் காரணம், இருவருக்கும் தாய்மொழி வெவ்வேறாக இருப் பதினாலேயாகும். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் தோற்றுவித்த அற நிலையங்களுக்கு, வட மொழியைத் தாய்மொழியெனக் கொண்டுள்ள மக்கள்

---

1. Of the loan words from Sannskrit some have been borrowed wantonly i.e: when there are many Tamil words to express the ideas; this is partly due to the Brahmanas whose familiarity with Sanskrit made them to import such words in their Tamil speech and writing - Pre - aryan Tamil culture - P 15.

தலைமை வகிப்பதன் ஒவ்வாமையைத் தமிழ் மக்கள் உணர்ந்து கண் விழித்துள்ளார்கள். தமிழனுக்குத் தமிழ் இசை பிடிக்காது; கருநாடக இசையும், இந்தி, தெலுங்குப் பாடல்களுமே பிடிக்கும் எனக் கூறி ஒரு கூட்டத்தினர் தமிழனை ஏமாற்றிய காலம் மலை ஏறிவிட்டது.

மக்கள் மொழி ஒன்றும், சமயமொழி இன்னொன்றுமானபோது, தமிழ் சிறிது சிறிதாகக் குன்றுவதாயிற்று.

சமயமும் மொழியும் நகமும் சதையும்போல் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கப்படாமல் இருந்து வருவதை நாம் முன்பு விளக்கியுள்ளோம். தமிழர் வழிபடும் தமிழ்க் கடவுளருக்குத் தமிழ் மொழியில் துதி பாடுதலே தக்கது. அவ் வழக்கே இருந்துவந்தது. பிற்காலத்தில் மொழியும் சமயமும் பிரிக்கப்பட்டன. தமிழின் இடத்தை வடமொழி ஏற்றது. அப்பொழுது மொழி, நகம் போன விரல்போல் ஆயிற்று. நகம் போன விரலுக்குத் துன்பம் உண்டாவது போலச் சமயத்தினின்றும் பிரிக்கப்பட்ட தமிழுக்குப் பல இடையூறுகள் நேர்ந்தன. வடமொழியைக் கடவுள் மொழியாகக் கொண்ட கோயிற் பூசகர், "ஆரியம் நன்று; தமிழ் தீது" எனக் கூறுவாராயினர். இதனால் ஆரியம் தமிழ் என்னும் இரு கட்சிகளுக்குகிடையில் பூசல்கள் நேர்ந்தன. நாள் ஏற ஏறப் பொது மக்கள் அறியாமை காரணமாக ஆரியம் கடவுள் மொழியென நம்பத் தலைப்பட்டனர். தமிழைப் புனிதமுடையதெனக் கருதாமையால், வடமொழிப் பற்றுடையார் வடமொழிச் சொற்கள் பலவற்றைத் தமிழோடு கலக்கலாயினர். தமிழ் கற்றோர்க்கு மதிப்பின்மையும், வடமொழி கற்றார்க்கு மதிப்பும் நாளடைவில் உண்டாயிற்று. இவ்வாறு வடமொழி சமயமொழியான காலம் முதல், தமிழ் சிறிது சிறிதாகத் தன் வலி

இழந்து குன்றி வருகின்றது. முற்காலத் தமிழ் இலக்கியங்களைப் பின் நோக்கி ஆராய்ந்து செல்லச் செல்ல, அவைகளில் பிறமொழிச் சொற்கள் கலவாதிருத்தலையும், மொழியின் வளம் பெரிதாயிருத்தலையும் நாம் காணலாம்.

தமிழ்க் கடவுளருக்கு ஆரியப் பூசாரிகள் ஆரியம் பாடுவது நகைப்புக்கிடமானது.

தமிழ் நாட்டில் வழிபடப்படும் கடவுளர் ஒருவரேனும் வடநாட்டுக் குரியவரல்லர். இத் தமிழ்க் கடவுளருக்கு ஆரியர் பூசாரிகளாக விருந்து ஆரியம் பாடுதல் நகைப்புக்கு இடமானதாகும். அதனைக் கண்டு வாளாவிருக்கும் தமிழ் மக்களின் செயல் மிக இரங்கத்தக்க தொன்றாகும். நந்தனர் நெருப்பில் முழுகிச் சிதம்பர ஆலயத்துள் நுழைந்தார் என்பனபோன்ற கதைகள் இன்று வலிபெறவில்லை. ஒரு நந்தனருக்குப் பதில் பல நந்தனர்கள் இன்று தமிழர் கோயில்களுள் நுழைந்து வருகிறார்கள். இவர்களைக் கண்டு கோயில்களிலுள்ள தெய்வங்கள் ஓட்டம் பிடிக்கவில்லை. கடவுளுக்கு ஆரியம் பாடினால் விளங்கும்; தமிழ்ப் பாடினால் விளங்காது என்னும் மூடக்கொள்கை நீங்கும் காலம் தொலைவில் இல்லை. ஒரு மொழியை விளங்க மாட்டாத இன்னொரு மொழிக்காரனுக்கு இரு மொழிகளை அறிந்த ஒருவன் மொழிபெயர்ப்பாளனாக இருப்பதுபோல், தமிழ் மக்களின் எண்ணங்களைக் கடவுளர்களுக்கு ஆரிய மொழியில் கூறுகின்றோம் எனச் சொல்லி, இரு பகுதியினருக்கும் இடையில் தரகராக நின்று, நடிப்பது ஒரு சூழ்ச்சிக் கூத்தேயாகும். இந்த நடிப்புச் சூழ்ச்சியை அறிந்து, அவர்களை ஆலயங்களினின்றும் இவ் விருபதாம் நூற்றாண்டிலும் மக்கள் அகற்றாமலிருப்பது வியப்பினும் வியப்பே!

ஆலயங்கள் எவருக்கும் பொது; அங்கு கட்டணங்களும் கட்டுப்பாடுகளும் ஆகா.

ஆலயங்கள் எவருக்கும் பொது. அவைகளில் கட்டணங்களோ, கட்டுப்பாடுகளோ கூடா. வேண்டியவர் வேண்டியபடி கடவுள் வழிபாடு செய்யும் உரிமை வேண்டும். இன்னது செய்ய இன்ன கட்டணம் என்னும் விதிகள் உடனே அகற்றப்படவேண்டும். வழிபடுவோரிடம் கட்டணம் தண்டும்படி எந்த ஆகமமும் கூறவில்லை. கோயிலில் வரி தண்டுவது "கிரிமினல்" குற்றச் சாட்டுக்களுள் ஒன்ருகக் கொள்ளும் சட்டம் உடனே தோன்ற வேண்டும். ஆலயங்களை அரசாங்கமோ, ஊர்ச் சபைகளோ நடத்தவேண்டும். கோயிலை மேற்பார்க்கும் "பார்ப்பார்" அல்லது பூசாரிகள், குலங் கோத்திர வேறுபாடுகளின்றி மக்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டும். பூசாரியாயிருக்கும் உரிமை தலைமுறை தலைமுறையாக வருதல் கூடாது. உலகம் விரைவாக மாறுதல் அடைந்து வருகின்றது. இற்றைக்கு ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய வழக்கங்கள் இன்று பயனளியா. முற்காலத்தில் சமயத்தின் பெயரால் சிறந்த அறங்கள் என மக்கள் கருதிச் செய்யப்பட்டவை. இன்று மக்களைச் சிறைச்சாலைகளுக்கும் தூக்கு மரங்களுக்கும் போக்கும் கொடுங் குற்றங்களாக மாறியுள்ளன. தமிழ்த் தெய்வங்களுக்கு ஏன் ஆரியம் பாடவேண்டும் என்னும் கேள்வி ஏன் எழக்கூடாது? "தீண்டாதார்" ஆலயத்தில் புகலாம் எனச் சட்டம் பிறந்ததுபோல, இனித் தமிழர் ஆலயங்களில் ஆரியம் பாடுதல் ஆகாது; தமிழ்தான் பாடுதல் வேண்டும் என்னும் சட்டம் ஏன் பிறத்தல் ஆகாது? தமிழ்க் கடவுளுக்கு ஆரியன் ஏன் பூசாரியாக அமர்தல் வேண்டும்; தமிழன் ஏன் அமர்தல் ஆகாது?

பூசாரி என்பவன் யார்?

இவ்விடத்தில், பூசாரி என்பவன் யார்? அவன் எப்படித் தோன்றினன்? அவன் ஏனையோரினும் எவ் வகையிலாவது உயர்ந்தவனு? அவன் தன்னை உயர்ந்தவ னுகக் கருதுவதில் பொருள் உண்டா? என்பனபோன்ற கருத்துக்களை விளக்கவேண்டி யிருக்கின்றது. இறந்து போன பொது மக்கள், பெருமக்கள் சமாதிகளில் கோயில் கள் எடுக்கப்பட்டன.[1] இறந்தவர்களின் ஆவிகளுக்குப் பலி செலுத்தும்பொருட்டு அடிமைகள் அல்லது வேலைக்காரர் நிறுத்தப்பட்டார்கள். இவர்கள் கால்வழி கால்வழியாகக் கோயில்களுக்குப் பலி செலுத்திவந்து பூசாரிகள் ஆயினர். இனிச் சமாதிகளல்லாது முழுமுதற் கடவுளின் அருட் குறியாக நிறுத்தப்பட்ட வடிவங்களுக்கும், மக்கள், பெரு மக்களுக்குச் செய்வதுபோல் பலி செலுத்தியும் வந்தார் கள். அவ்வாறு பலி செலுத்துவதற்கு நியமிக்கப்பட்ட வர்களும் கால்வழி கால்வழியாக அப் பணியைச் செய்து பெருகிப் பூசாரிக் குலத்தின ராயினர். இவர்கள் மந்திர வித்தைக்காரராகவும் இருந்தனர். மந்திரவித்தை என்பது மனிதன் துதிகளாலும் மந்திரங்களாலும் தெய்வங்களை

---

1. Temples were built at tombs or shrines. are dedicated to dead saints - worship is first offered to the actual Ghost of the person burried. The spirits of the dead are the Gods of the living great men, Ghost and Gods are originally un-differenitiated in thought. Ghosts are fed, propitiated, receive worship and the fittest Ghost survive and become Gods - Foot Prints of the Past - P. 20 - T. M. Wheeler.

இயற்கை விதிகளுக்கு மாருகவும், தனது விருப்பங்களுக்குச் சார்பாகவும் சிலவற்றைச் செய்யும்படி பணித்தல். தோத்திரங்கள் எனப்படுபவைகள் இவ்வகையினவே. [1]

ஆரியப் பூசாரிகள் மந்திரவித்தைக்காரர்களே

கடவுளர்களுக்கு, யாகங்களிலும், வேள்விகளிலும், கிரியைகளிலும் உணவு அளித்துத் துதி கூறுவதால், அவர்கள் மனிதனின் எண்ணங்களுக்கு வசப்பட்டு, அவர்கள் விரும்பியவைகளை எல்லாம் செய்துவிடுவார்கள் என்னும் நம்பிக்கையினுலேயே பலி செலுத்தும் யாகம் புரிதல் போன்ற கிரியைகள் தோன்றின. இவற்றின் விரிவை எம்மால் எழுதப்பட்ட 'ஆரியவேதங்கள்' என்ற நூலில்காண்க. ஆரிய வேதங்களில் காணப்படும் துதிகள் இவ்வகையினவே. ஆரிய வேதங்களை அடிப்படையாகக் கொண்டு மந்திர வித்தைகளால் கடவுளர்களைத் தாம் விரும்பிய வண்ணம் ஏவித் தாம் விரும்பியவற்றைப் பெறலாம் என்னும் கொள்கையை முடிவாக உள்ளதே பிராமண மதம். இப் பிராமண மதக் கொள்கைகளையுடையவர்களே இன்று ஆலயப் பூசகர்களாயிருந்து வருகின்றனர். ஆலயங்களில் "ஆன்மார்த்த" மல்லாதனவும், உலகார்த்தமான வழிபாடுகளும் செயல்களுமே நடைபெறுதலே நாம் காண்கின்றேம். இதற்குப் பொறுப்பு ஆலயப் பூசகர்கள் அல்லவோ? ஆன்மார்த்தத்துக்குக் கட்டணங்களும் வரிகளும், தக்கணைகளும் உண்டோ? மனிதன் மனவளர்ச்சியுருது கிரியைகளாலும் மந்திர வித்தைகளாலும் உயர்

---

1. Prayer books are a collection of good spells against evil as well as petitions for blessings, fine weather, suceess in war, and other desired objects - I bid P. 114.

நிலை அடைய நினைத்தல், கையில்லாத ஊமன் கொம்புத் விரும்பியது போலாகும்.

ஆரியச் சொற்களைத் தமிழில் நுழைப்பதால், தமிழ் வளர்ச்சியுறும் என்னும் தவறான கருத்து.

தமிழிலே சமக்கிருதச் சொற்களை நுழைத்தலால் தமிழ் வளம் பெறும் என ஒரு சாரார் கருதுகின்றனர்; கருதுவதல்லாமல், அக்கருத்தினை எதிர்ப்போர் தமிழ்வளர்ச்சியைத் தடுக்கின்றனர் எனக் கூறி வாதங்களும் புரிகின்றனர். ஒவ்வொரு மொழிக்கும் சிறப்பான ஒலிகள் உண்டு. ஒரு மொழிக்குரியவர்கள் இன்னொரு மொழிக்குரிய மக்களோடு கலக்கும்போது, ஒருவர்நாட்டில் காணப்படாத புதிய பொருள்கள் செயல்களைக் குறிக்கும் சொற்கள், மற்றவர் மொழியில் புகுதல் இயல்பு. அவ்வாறு புகுமிடத்து அவை மொழிபெயர்ப்பாக அல்லது மொழிக்கேற்ற உச்சரிப்பு முறையாகத் திருத்தி வழங்கப்படும். இவ்வாறே கீழ்நாட்டுச் சொற்கள் பல ஆங்கில மொழியிற் புகுந்துள்ளன. முற்காலத்தில் எகிப்திய, எபிரேய கிரேக்க, உரோம மொழிகளில் புகுந்த தமிழ்ச்சொற்களும் அவ்வம் மொழிகளுக்கேற்ற ஒலிமுறையில் திரித்து வழங்கப்பட்டன. இதனால் அவை பிற மொழிச்சொற்களோ என ஐயப்படத் தக்கனவா யிருந்தன. புதிய பொருள்களையும் செயல்களையும் குறிக்கும் பழைய தமிழ்ச்சொல் இல்லாவிடின் மேற்கண்ட முறைப்படி சொற்களை ஆக்கித் தமிழில் சேர்க்கலாம். அப்பொருள்களையும் செயல்களையும் குறிக்கத் தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது, அவைகளுக்குப் பதில் பிற மொழிச் சொற்களை ஆளின், பழைய சொற்கள் வழக்கொழிவதால், நாளடைவில் மொழிவளர்ச்சி

குன்றிவிடும். இன்று சில குழுவினர் பிறமொழிச் சொற்களை அம்மொழி உச்சரிப்புக்களோடு தமிழிற் புகுத்தி வருகின்றனர். இதனால் தமிழ் பெரிதும் சீர்கெட்டு வருகின்றது. தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளும் மக்கள் இவ்வாறு புரிய ஒருபோதும் இணங்கமாட்டார்கள்.

தோற்றத்தில் சமக்கிருதம்போல் தோன்றும் சொற்கள் எல்லாம் சமக்கிருதச் சொற்களா?

வடமொழியில் காணப்படும் சொற்கள் தமிழில் காணப்பட்டால், அவை வடமொழிச்சொற்கள்என வடமொழிப் பண்டிதர்கள் ஆராய்ச்சியின்றிக் கூறி வருகின்றனர். வடமொழி கடவுள் மொழியாதலின், அது பிற மொழிகளினின்றும் சொற்களை இரவல் பெறமாட்டாது; கடவுள் மொழிகளல்லாத பிற மொழிகளே சமக்கிருதத்தினின்றும் சொற்களை இரவல் பெறக் கூடியன என்பது அவர்கள் கருத்தாகும். இருமொழிக்குரியவர்கள் கலக்கும்போது, ஒருவர் மொழிச் சொற்களில் சில, மற்றவர் மொழியில் சென்று ஏறுதல் இயல்பேயாகும். முத்து, மிளகு, ஏலம் முதலியவைகளைக் குறிககும் பெயர்கள், தமிழிலிருந்து சமக்கிருதத்தால் இரவல் வாங்கப்பட்டுள்ளன. வட மொழியிற் காணப்படும் மிரிசா (மிரியல்-மிளகு) முத்தா, ஏலா முதலிய சொற்கள் தமிழிலிருந்து இரவல் பெற்றனவாகும். இவையல்லாமல் நீரம், மீனம் போன்ற பல சொற்களும் தமிழினின்று வட மொழியிற் சென்றுள்ளன. இவைகளை வட சொற்களென்றே சாதிக்கும் வட மொழிப் பண்டிதர்களுமுளர். ஆரியர் வருகைக்கு முன், நீர், மீன் என்பவைகளின் பெயர்களை அறியாது தமிழர் நீரைக் குடித்தார்கள்; மீனை உண்டார்கள்; பின்பு அவர்கள் ஆரியரிட

லிருந்து அவைகளுக்குப் பெயர்களைக் கேட்டு அறிந்து கொண்டார்கள் எனக் கொள்ளலாகுமா? இவ்வாறு ஆரியப் போர்வையில் வட மொழியிற் சென்றுள்ள பல தமிழ்ச் சொற்களை நாம் தமிழுக்கு மீட்டுக்கொள்ளலாம். சங்க நூல்களில் காணப்படும் சில சொற்கள் வடமொழிச் சொற்களோ அல்லவோ எனச் சந்தேகிக்கப்படுகின்றன. தமிழினின்று இரவல் பெற்ற பல சொற்களைப்போலவே அவைகள் வடமொழியிற் சென்றிருக்கலாம்.[1] இரு மொழிகளி

---

1 ஆராய்ச்சியாளர் ஒருவர் மயில், பலம், பீழை, சிகழிகை, கழகம் முதலிய சொற்கள் வடமொழியினின்றும் தமிழ் இரவல் பெற்றுக்கொண்டவை எனக் கூறுகின்றார். மயில், பழம், பீழை, சிகழிகை, கழகம் முதலிய தமிழ்ச் சொற்களே வடமொழியில் மயூரம், பலம், பீடா, சீர்ஷக, என்பனபோன்ற சொற்களாக மாறுவேடத்திற் காணப்படுகின்றன எனக் கூறலாகாதா? வடமொழியில் வழங்கும் பலம், மயூரம் முதலிய சொற்கள், திராவிடச் சொற்கள் எனக் கிற்றல் என்பார் கூறியுளார். அவர் கூற்றினை எஸ். கே. சட்டேர்ஜி, பந்தர்க்கர் போன்ற பேராசிரியர்கள் எடுத்து ஆண்டுள்ளார்கள். கலை என்னும் சொல் வடமொழிக்கு உரியதெனத் துணியக் கூடாமையைக் காலின்ஸ் என்னும் ஆசிரியர் "திராவிட ஆராய்ச்சி" என்னும் நூலில் எடுத்து விளக்கியுள்ளார். சமக்கிருதத்தில் மூலம் எழுதப்பட்டுள்ள சொற்கள் எல்லாம் வடமொழிக்குச் சொந்தமானவை என்று கருதல், கருதி விடுதல் ஆகாது. அம்மொழியைக் கையாண்டு சொன் மூலங்கள் எழுதியவர்கள் அது தெய்வ மொழியென்றும், அது பிற மொழிகளிலிருந்து குனிந்து இரவல் வாங்கமாட்டாதென்னும் மூட இறுமாப்புடையவர்களாவர். வடமொழிச் சொற்கள் பலவற்றுக்கு எழுதப்பட்டுள்ள சொன் மூலங்கள் தப்பாயிருத்தலையும், அவைகளுட் பல, தமிழ் அடிகளாகத் தோன்றுதலையும் காலஞ்சென்ற நல்லூர் சாமி ஞானப் பிரகாசர் தனது தமிழ்ச்சொற் பிறப்பு ஒப்பியலகராதியில் ஆங்காங்கு நன்கு எடுத்துத் தெளிவுபடுத்தி யுள்ளார்.

G. D. NAIDU,
U. M. S.

லும் அச் சொற்கள் காணப்படுதல் பற்றி வடமொழிப் பண்டிதர்கள் அவைகள் வடமொழிச் சொற்கள் எனக் கருதலாயினர். வடமொழிச் சொற்கள் எனக் கருதப் பட்ட பல சொற்கள் தமிழ் மொழிக்கே சொந்தமாதலை ஆராய்ச்சி அறிஞர் பலர் ஆராய்ந்து காட்டியுள்ளார்கள். சங்க நூல்களில் காணப்படும் வடமொழிச் சொற்கள் எனக் கருதப்படுவன, இருமொழிகளுக்கும் பொதுவாகிய சொற்களாகலாம் என மக்லீன் என்பார் கருதுவாராயி னர்.[1] கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழி களினின்றும் ஆரியச் சொற்களை நீக்கிவிட்டால் மீந்திருப் பன தமிழ்ச் சொற்களும், இன்று தமிழில் வழக்கு ஒழிந்துபோன பழஞ் சொற்களுமே யாகும். இவ்வாறு சமக்கிருத மொழியினின்று இந்து ஐரோப்பிய ஆரிய மொழிகளுக்குப் பொதுவாயுள்ள சொற்களை நீக்கிவிட் டால், மீந்திருப்பன திராவிட மொழிச் சொற்களேயாகும். அவற்றுட் பல இன்று தமிழில் வழக்கொழிந்து கன்னடம் தெலுங்கு முதலிய மொழிகளில் மாத்திரம் காணப்படும் பழந்தமிழ்ச் சொற்களை ஒத்தனவாகும்.

வின்ஸ்லோ அகராதியின் முன்னுரையில் வில்லியம் டெயிலர் (William Taylor) கூறியிருப்பது வருமாறு:

ஆதியில் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் வாழ்ந்த ஆதிக்குடிகளிடையே ஒரே மொழி பேசப்பட்டு, அஃமொழி சீர்திருத்தம் அடைந்து, வடகோடியில் பாலியா

1. Sanskrit words are said to have been introduced even before the arrival of the Jains, but it is doubtful whether these are ancient words commen to both Aryan and Dravidian languages - Manual of administration of the Madras presidency - Vol - 1 - P. 41.

கவும், தென்கோடியில் தமிழாகவும் வழங்கிற்று. பழைய பாலி மொழியோடு சாத்திரத் தொடர்பான பல கல்தேய சொற்களையும், பொது வழக்கிலுள்ள பல சொற்களையும் சேர்த்துச் சமக்கிருதமொழி உண்டாக்கப்பட்டது. இம் மொழிகளின் பெயர்களைக் கவனிக்கையில் பாலிமொழி சமக்கிருதத்துக்கு முந்தினதென்றும் தெரிகின்றது. பாலி என்றால் மூலம் அல்லது முந்தினது என்று பொருள். சமக் கிருதமென்றால் திருத்தம் பெற்றது அல்லது செம்மை யாக்கப்பட்டது என்பது பொருள். மிகப் பழைய பட்டை யங்கள் பிராகிருதத்திலும் பாலியிலும் எழுதப்பட்டுள்ளன. இவை சமக்கிருதத்தில் எழுதப்பட்ட சாசனங்களுக்கு முற்பட்டவை. இதனைக் கர்னல் சைக்ஸ் (Colonel Sykes) என்பார் ஆராய்ந்து கூறியுள்ளார்.

சமக்கிருதம் கடவுள்மொழி யென நம்புவது முழு அறியாமை

மேல் நாடுகளினின்றும் இந்திய நாட்டை அடைந் துள்ள ஆங்கிலம், பிரெஞ்சு, முதலிய மொழிகளைப் போலவே, ஆரியமும் இந்திய நாட்டுக்கு அன்னியமொழி யாக வுள்ளது. இம்மொழி இந்திய நாட்டை அடைந்த போது, இலக்கண வரம்பு இல்லாதும் பல குறைபாடுகள் உடையதாயும் இருந்தது. ஆரியர் இந்திய நாட்டை அடைந்து கிராமவாழ்க்கையினரா யிருந்தபோது, தமிழர் நகர வாழ்க்கையினராய் வாழ்ந்தார்கள். ஆரியர் சிறிது சிறிதாகத் தமிழர்களோடு பழகிக்கலக்க நேர்ந்தபோது அவர்கள் ஆரியரின் மொழிக்கு இலக்கண வரம்பு செய் தார்கள்; எழுத எழுத்துக்களை உதவினார்கள்; அவர் களுக்குப் பல நூல்களை எழுதினார்கள். ஆரியரின் மிகப் பழைய நூல் எனப்படும் இருக்கு வேதமும் தமிழரின்

கூட்டுறவு இன்றிச் செய்யப்பட்டதெனக் கூறுதல் அமையாது. வேதமொழியில் பல தமிழ்ச்சொற்கள் காணப்படுவதையும், வேதபாடல்கள் செய்தவர்களிற் பலர் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களா யிருந்ததலேயும் கீழ்நாட்டு மேல்நாட்டு அறிஞர்கள் ஆராய்ந்து கூறியுள்ளார்கள். சமக்கிருதம் ஒரு கூட்டத்தினரின் சாதி மொழியும், சமய மொழியுமாக இருந்து வந்தது. அம்மொழி, இலக்கியமொழி அளவில் பயன் அளித்தது. அம்மொழியில் எழுதப்பட்ட கிரியை நூல்களாகிய பிராமணங்களைப் பயின்று, கிரியை புரியும் பிராமணக் குழுவினர்களுக்குள் மாத்திரம் அம் மொழி வழங்கிற்று. அது ஒருபோதும் பேச்சுமொழியாக வழங்கவில்லை. கிறித்துவம், புத்தம், முகமதியம்போன்று பிராமணமதம் இந்தியநாடு, மாலாய்த் தீவுகள், கம்போடியா முதலிய நாடுகளிற் பரவியபோது, அம்மதத்தோடு சமக்கிருதமும் கூடச் சென்றது. மத சம்பந்தமாக மக்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டார்கள் எனக் கூற முடியாது. குருமார் (பூசாரிகள்) நினைத்தபடி யெல்லாம் மக்கள் ஆடினார்கள். சமயத்தின் பேரால் அரசனைக் கொலை செய்தார்கள், பெண்களையும், ஆண்களையும் பலியிட்டார்கள்; [1] பாம்பை வணங்கினார்கள்; குதிரைகளைப் பலியிட்டு அதன் மாமிசத்தை உண்டார்கள்; சொல்லத் தகாத இடக்கரான கருமங்களைச் செய்தார்கள். சிலைகளுக்குக் கன்னிப் பெண்களை மணம் முடித்துவைத்து அவர்களின் போகத்தைக் குருமார்கள் கடவுளின் பிரதிநிதிகளாக விருந்து அனுபவித்தார்கள்; அனுபவிக்கிறார்கள். இவ்வாறு மக்கள் பூசாரிகள் ஆட்டிய ஆட்டங்களுக்கு ஆடியவைகளுள், சமக்கிருதத்தைக் கடவுள் மொழியெனக

---

1. எம்மால் எழுதப்பட்ட "பாம்புவணக்கம்" என்ற நூலில் விவரங்களைப் பார்க்கலாம்

கொண்டதும் ஒன்றாகும். கடவுள் மொழியென ஒன்று இல்லையெனப் பட்டப் பகல்போல இன்று எல்லோருக்கும் விளங்குகின்றது. இவ்வாறிருக்கவும், பொதுமக்களின் அறியாமையையே தமது பிழைப்புக்கு வலிமையாகக் கொண்டுள்ள ஒரு கூட்டத்தினர், உலகை எமாற்றி வருதலைத் தமிழன்பர்களும், தமிழ்த்தொண்டர்களும் பார்த்துச் சும்மா இருக்கலாமா? இம் முழு மூடத்தனத்தை ஒழித்தலன்றோ தன்னரசு அடைவதிலும் மேலான குறிக்கோளாகும்.

[1] சமக்கிருதத்தைக் கடவுள் பேசும் மொழியென நினைப்பது குற்றியை மகனென்றும், கயிற்றைப் பாம்பென்றும் நினைப்பது போன்ற அறியாமையென விளங்குகின்றது. அவ்வாறாகவும் விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றுள் விழுபவர்போல, மக்கள் தமது சொந்த மொழியைவிட்டு அயலவன் மொழியைக் கடவுள் மொழியென நம்பி வருகின்றார்கள். இதுவே இவ்விருபதாம் நூற்றாண்டு வியப்புக்களுள் வியக்கத் தக்க தொன்றாகும்.

---

1. It was for many years universally believed that Sanskrit was the mother tongue, to which all languages could be traced. The theory was not by far absurd as that which had been set up some time previously by certain religious zealots, who from an exaggerated reguard, untutored by science, for all that is cennected with the inspired books, of our creed went so far as to assert that Hebrew was mother of all languages in the world - Vedic India - P. 58 - A. Ragozin.

G. D. NAIDU,
U. M. S., COIMBATORE.

முத்தமிழ் நிலையம்

75, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

புதிய வெளியீடுகள்.

1.	தமிழர் யார்?	0	8
2.	ஆரியர் தமிழர் கலப்பு	0	8
3.	தமிழ்: பழமையும் புதுமையும்	0	8
4.	தமிழர் சமயம் எது?	0	8
5.	ஆரிய வேதங்கள்	0	10
6.	மரணத்தின் பின்?	0	8
7.	பெண்ணே பெரியவள்—என்?	0	8
8.	சிந்துவெளித் தமிழர்	0	8
9.	தமிழர் சரித்திரம்	3	0
10.	பாம்பு வணக்கம்	0	4
11.	உலக அறிவியல் நூல் பகுதி-1	0	8
12.	தமிழ் ஆராய்ச்சி	0	6
13.	பெண்கள் உலகம்	0	14
14.	மனிதன் எப்படித் தோன்றினான்?	0	8
15.	ஆயிரம் வினாக்களும் விடைகளும்	1	0
16.	சமணமும் சைவமும்	0	8
17.	இராவணன் வித்தியாதரனா?	0	8
18.	உலகக்கலை-உயர்வுக்கு உதவியவர் யார்?	0	8
19.	திருக்குறள் தெய்வக் கொள்கை	0	4
20.	ஏ! தாழ்ந்த தமிழகமே C. N. அண்ணாத்துரை M. A.	0	8
21.	வேலைக்காரி ("ஜீவா")	1	8
22.	வேடதாரி ("ஜீவா")	1	4
23.	நடன சுந்தரி ("திரை ஒலி" ஆசிரியர்)	1	0
24.	இராவண காவியம்	6	0
25.	நாடக உலகில்	0	8
26.	தேன்கூடு (கவிதைகள்)	0	2
27.	எது இசை? (பாரதிதாசன்)	0	6
28.	தமிழரின் மறுமலர்ச்சி (C. N. A.)	0	8
29.	தமிழ்க்கடவுளுக்கு ஆரியப்பாடலா?	0	4
30.	திராவிடர் நாகரிகம்	0	8

The New Era Printers, Madras-1. Q.H. 459